**Proceedings of the Public Hearing Meeting Conducted for obtaining Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA – TN) for the Proposed Rough Stone and Gravel Quarry in an extent of 2.58 Ha by M/s. APK Minerals Private Limited, S.F. No. 263/1A, 1B, 1C, 1M1, 1M2, 1N1, 1N2, 1O, 1P1, 1P2, 1Q, 1R, 1S, 1T, 264/1, 2, 3, 4, 5, 6, 7, 8A, 8B, 9, 10, 11A, 11B, 12A, 12B, 12C, 13, 14, 15, 16A, 16B, 17, 18A, 18B, 19, 20A, 20B, 21, 22, 265/1, 2, 3, 4 & 5, Pazhaveri Village, Uthiramerur Taluk, Kancheepuram District.**

**Name of the Project:** Proposed Rough Stone and Gravel Quarry by **M/s. APK Minerals Private Limited**, S.F. No. 263/1A, 1B, 1C, 1M1, 1M2, 1N1, 1N2, 1O, 1P1, 1P2, 1Q, 1R, 1S, 1T, 264/1, 2, 3, 4, 5, 6, 7, 8A, 8B, 9, 10, 11A, 11B, 12A, 12B, 12C, 13, 14, 15, 16A, 16B, 17, 18A, 18B, 19, 20A, 20B, 21, 22, 265/1, 2, 3, 4 & 5, Pazhaveri Village, Uthiramerur Taluk, Kancheepuram District.

**Venue:** M/s. R.R.K Mahal,
No. 167, Thirumukkudal,
Thirumukkudal – Penayur Road,
Uthiramerur Taluk,
Kancheepuram District – 631 606.

**Date & Time:** 28.02.2025 – 10.30 A.M

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Mr. P.I. Ashik Ali, IAS | Sub Collector<br>Kancheepuram Division. |
| 2. | Mr. V. Purushothaman | District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 3. | Dr. S. Vediyapppan | Deputy Director,<br>Geology and Mining Department,<br>Kancheepuram District |
| 4 | Mr. C. Muthuraj | Assistant Environmental Engineer, |

| | | |
|---|---|---|
| | | Tamilnadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| | Mr. S. Kesavan | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 6. | Mr. R. Kiruba Renganathan R | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 7. | Public and Environmentalists | 100 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Sriperumbdur welcomed the Sub Collector / Sub-Divisional Magistrate, Kancheepuram, Government Officials, General Public and NGO's/ Environmentalists for the Public hearing and informed that the proposed Rough Stone and Gravel quarry by **M/s. APK Minerals Private Limited** in S.F. No. 263/1A, 1B, 1C, 1M1, 1M2, 1N1, 1N2, 1O, 1P1, 1P2, 1Q, 1R, 1S, 1T, 264/1, 2, 3, 4, 5, 6, 7, 8A, 8B, 9, 10, 11A, 11B, 12A, 12B, 12C, 13, 14, 15, 16A, 16B, 17, 18A, 18B, 19, 20A, 20B, 21, 22, 265/1, 2, 3, 4 & 5, Pazhaveri Village, Uthiramerur Taluk, Kancheepuram District in an extent of 2.58 Ha attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(d) of the said notification. Furthermore, the DEE, TNPCB, Sriperumbudur has also informed the following.

The State Environment Impact Assessment Authority (SEIAA – TN) issued the Terms of Reference (ToR) with a public hearing on 29.07.2024 for preparing the Environmental Impact Assessment (EIA) report for the said activity under the Environmental Impact Assessment Notification, 2006.

The project proponent has submitted the draft EIA report to the office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur and requested to conduct the Public Hearing Meeting for its proposed activity. In this regard, Public Notices for this Public Hearing Meeting scheduled on 28.02.2025, were published in *Deccan Chronicle* and *Dinakaran Newspapers* on 10.01.2025 with the approval of the District Collector, Kancheepuram. Further, Public announcements have also been made via loudspeakers in the surrounding villages about this Public Hearing Meeting.

The District Environmental Engineer has added that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted would be explained through a Power Point presentation by the EIA Coordinator, M/s. Creative Engineers and Consultants on behalf of the Project Proponent. Furthermore, the DEE has requested that, after the presentation, the public clearly state their name and village details, and then express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN and requested the Sub Collector, Kancheepuram to preside over the Meeting.

The Sub Collector, Kancheepuram Division requested the Project proponent to explain about the Proposed Project and the Environmental Impact Assessment (EIA) study conducted to the Public.

Following this, on behalf of the Project Proponent, the EIA Coordinator welcomed the Sub Collector, District Environmental Engineer, Government Officials, General Public and Environmentalists and then explained the Proposed Project and EIA study conducted with help of Power Point Presentation.

After the Presentation, the Sub Collector, Kancheepuram District requested the Public to express their views / opinions either verbally or in writing by clearly stating their names and villages. Accordingly, the Public have expressed their views and opinions as follows.

**1) Mr. Mohan, Seethavaram Village:**

He said that due to the quarries in this area, dusts are settling on crops, schoolchildren are being affected, and agriculture is being affected, and therefore, he stated that they do not want quarries in their district.

**2) Mr. Parthiban, Pazhaveri Village:**

He said that the quarries have destroyed the hills, villages are being ruined, and it has become impossible to go grazing, and therefore, he stated that no permission should be granted for new quarries in their area henceforth.

**3) Mr, Sivakumar, Uthiramerur:**

He said that the public consultation meeting should have been held in their area, specifically in Palaveri village, and that the vehicles transporting stones from the quarry are carrying more stones than the allowed limit, causing harm to people. Finally, he stated that permission for new quarries should not be granted in the Uthiramerur area of Kanchipuram district.

**4) Mr. Airport Ellappan, Pazhaveri Village:**

He requested that permission be granted for the quarry and to ensure that it is operated without causing any inconvenience to the people.

**5) Mr. Marimuthu, Arukundram:**

He said that there is no objection to the proposed stone quarry and that the livelihood of the surrounding village people depends on the stone quarry. Therefore, he requested that the stone quarry be allowed.

**6) Mr. Ravichandran, Arumbuliyur:**

He said that they do not want quarries in their area because they are causing a lot of deaths, and he requested that the damaged roads be repaired. Finally, he reiterated that the quarry should not be permitted.

**7) Mr. Vempuli, Pazhaveri Village:**

He said that the quarry can be operated and that speed bumps should be placed at curves to reduce the speed of vehicles. He also mentioned that he has provided his land for the stone quarry and therefore requested that priority in job opportunities be given to the people of Palaveri village.

**8) Mr. Rajasekar, Pazhaveri Village:**

He said that he welcomes the establishment of the quarry and that the quarry owners should help the villagers and school students, as well as provide facilities like medical check-ups. He also stated that if the dust from vehicles is controlled by sprinkling water on the roads and there is no disturbance to the people, he welcomes the quarry.

**9) Mr. Haridas, Pazhaveri Village:**

He said that stone quarries are causing various harms and that no quarry sprinkles water on the roads, so all stone quarries in Kanchipuram district should be shut down. He further requested that the number of stone quarries be reduced.

**10) Mr. Tamilarasu, Pazhaveri Village:**

He said that the existing stone quarries should be closed and no new stone quarries should be allowed. He stated that people are being affected by the dust caused by vehicles carrying excessive loads. He also mentioned that groundwater and agriculture are being harmed by the stone quarries, and therefore, there is no need for crushers in Palaveri village, and the number of existing crushers should be reduced.

**11) Mr. Dasaradhan, Pazhaveri Village:**

He said that the lorries carrying stones from the stone quarry should cover them with tarpaulin while transporting, the roads should be repaired, and the operations should be conducted without causing disturbance to the people.

**12) Mr. Megavannan, Pazhaveri Village:**

He said that excessive dust is being generated because lorries are carrying too many stones, and this needs to be controlled. He also asked where people could go to buy the construction materials needed for their homes, and therefore, he stated that he has no objection to granting permission for the stone quarry.

Then, the Sub Collector, Kancheepuram said that if any other members of the public wished to express their opinions, they could come forward to register them. Since no others from the public came forward to share their views, he asked the District Environmental Engineer to briefly summarize the meeting's proceedings.

Then, the District Environmental Engineer has summarized and also informed that the said views, suggestion and responses of the public are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu along with the written representations received from the Public.

Furthermore, the District Environmental Engineer informed that the Proceedings of the Public Hearing Meeting will be made to be displayed at the District Collectorate, Kancheepuram, Uthiramerur Taluk office, Pazhaveri Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Comments, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –Tamil Nadu / MoEF&CC) and the applicant concerned.

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Sriperumbudur**

**Sub Collector**
**Kancheepuram Division**

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Tamil & English Newspapers dated 10.01.2025 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 11 & 100 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. No Petitions were received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting.

**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பழவேரி கிராமம், புல எண்கள். 263/1A, 1B,1C,1M1, 1M2, 1N1, 1N2,10,1P1,1P2,1Q,1R,1S, 1T, 264/1, 2, 3, 4, 5, 6, 7, 8A, 8B, 9, 10, 11A, 11B, 12A, 12B, 12C, 13, 14, 15, 16A, 16B, 17, 18A, 18B, 19, 20A, 20B, 21, 22, 265/1, 2, 3, 4, & 5ல் 2.58.0 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். APK மினரல்ஸ் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உத்தேசிக்கப்படுவது குறித்து மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 28.02.2025 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்**

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்:** | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பழவேரி கிராமம், புல எண்கள். 263/1A, 1B,1C,1M1, 1M2, 1N1, 1N2,10,1P1,1P2,1Q,1R,1S, 1T, 264/1, 2, 3, 4, 5, 6, 7, 8A, 8B, 9, 10, 11A, 11B, 12A, 12B, 12C, 13, 14, 15, 16A, 16B, 17, 18A, 18B, 19, 20A, 20B, 21, 22, 265/1, 2, 3, 4, & 5ல் 2.58.0 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். APK மினரல்ஸ் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவப்படுவது தொடர்பாக. |
| **இடம்:** | தி/ள். ஆர்.ஆர்.கே. மஹால், எண். 167, திருமுக்கூடல், திருமுக்கூடல் – பினாயூர் ரோடு, உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| **நாள் மற்றும் நேரம் :** | 28/02/2025 – காலை 10.30 மணி |

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பி.ஐ.ஆசிக் அலி | சார் ஆட்சியர்,<br>காஞ்சிபுரம் கோட்டம் |
| 2. | வி. புருஷோத்தமன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திரும்பெரும்புதூர். |
| 3. | முனைவர்.சு.வேடியப்பன் | துணை இயக்குநர் (புவியியல் மற்றும் சுரங்கத்துறை) காஞ்சிபுரம் மாவட்டம். |

| | | |
|---|---|---|
| 4. | செ.முத்துராஜ் | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திரும்பெரும்புதூர். |
| 5. | சீ.கேசவன் | உதவி பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திரும்பெரும்புதூர் |
| 6. | இரா.கிருபாரெங்கநாதன் | உதவி பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திரும்பெரும்புதூர் |
| 7. | பொதுமக்கள் மற்றும்<br>சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (100 நபர்களின் பட்டியல்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர், காஞ்சிபுரம் கோட்டம் அவர்களையும், பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பழவேரி கிராமம், தி/ள்.APK மினரல்ஸ் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிரேவல் குவாரி, புல எண். 263/1A, 1B, 1C, 1M1, 1M2, 1N1, 1N2, 1O, 1P1, 1P2, 1Q, 1R, 1S, 1T, 264/1, 2, 3, 4, 5, 6, 7, 8A, 8B, 9, 10, 11A, 11B, 12A, 12B, 12C, 13, 14, 15, 16A, 16B, 17, 18A, 18B, 19, 20A, 20B, 21, 22, 265/1, 2, 3, 4, & 5,ல் 2.58.0 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பிற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 29.07.2024 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு

வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள் .APK மினரல்ஸ் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், திருமுக்கூடல் – பினாயூர் ரோடு, திருமுக்கூடல் கிராமம் தி/ள். ஆர்.ஆர்.கே.மஹாலில் 28.02.2025 காலை 10.30 மணியளவில் நடைபெறும் என்று "டெக்கான் கிரானிக்கல்" மற்றும் "தினகரன்" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 10.01.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள்.APK மினரல்ஸ் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஒருங்கிணைப்பாளர் (EIA Coordinator) தி/ள்.கிரியேட்டிவ் இன்ஜினியர்ஸ் & கன்சல்டன்ட்ஸ், சென்னை அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் கோட்டம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார் .

திரு. ப. சாமிநாதன், சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஒருங்கிணைப்பாளர் (EIA Coordinator) தி/ள்.கிரியேட்டிவ் இன்ஜினியர்ஸ் & கன்சல்டன்ஸ், சென்னை அவர்கள் சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு

அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் சார் ஆட்சியர், காஞ்சிபுரம் கோட்டம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்கள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

<u>1, திரு.மோகன், சீத்தாவரம் கிராமம்</u>

இவர் கூறுகையில் இப்பகுதியில் உள்ள குவாரிகளால் தூசு பயிர்கள் மேல் படிவதாகவும், பள்ளிக்குழந்தைகள் பாதிக்கப்படுவதாகவும், விவசாயம் பாதிக்கப்படுவதாகவும் எனவே தங்கள் மாவட்டத்திற்கு குவாரியே வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்.

<u>2. திரு.பார்த்திபன், பழவேரி கிராமம்,</u>

இவர் கூறுகையில் குவாரிகளால் மலைகள் அழிக்கப்பட்டு விட்டதாகவும், கிராமங்கள் அழிந்து கொண்டிருப்பதாகவும், மேய்ச்சலுக்கு செல்ல முடியவில்லை எனவும், எனவே இனிமேல் தங்கள் பகுதிக்குள் குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது எனத் தெரிவித்தார்.

3. <u>திரு.சிவக்குமார், உத்திரமேரூர் வட்டம்</u>

இவர் கூறுகையில் கருத்து கேட்பு கூட்டத்தை தங்கள் பகுதியில் அதாவது பழவேரி கிராமத்தில் நடத்தியிருக்க வேண்டும் எனவும், குவாரியில் இருந்து கற்களை ஏற்றி செல்லும் வாகனங்கள் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக கற்களை ஏற்றி செல்வதாகவும் இதனால் மக்கள் பாதிக்கப்படுவதாக கூறினார்.இறுதியாக காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் பகுதியில் குவாரிக்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

4. **திரு.ஏர்போர்ட் எல்லப்பன், பழவேரி கிராமம்**

இவர் கூறுகையில் குவாரிக்கு அனுமதி அளித்து மக்களுக்கு இடையூறு இல்லாமல் நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

5. **திரு.மாரிமுத்து, அருங்குன்றம் கிராமம்**

இவர் கூறுகையில் கல்குவாரி வருவதினால் எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை எனவும் சுற்றி இருக்கும் அனைத்து கிராம மக்களுக்கும் கல்குவாரியால் தான் பிழைப்பு நடப்பதாக கூறினார் இதனால் கல்குவாரி வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

6. **திரு.இரவிச்சந்திரன், அரும்புலியூர் கிராமம்**

இவர் கூறுகையில் தங்கள் பகுதிகள் குவாரி வேண்டாம் அதனால் அதிகமாக உயிர் பலி ஆகின்றன எனவும், பழுதடைந்துள்ள சாலையை சரி செய்து தரும்படி கேட்டுக் கொண்டார் இறுதியாக கல் குவாரி வேண்டாம் என கேட்டுக் கொண்டார்.

7. **திரு.வேம்புலி, பழவேரி கிராமம்**

இவர் கூறுகையில் குவாரியை நடத்தலாம் எனவும் வளைவில் வேகத்தடை போட வேண்டும் இதனால் வாகனங்களின் வேகம் குறையும் என்றார். மேலும் கல்குவாரிக்கு தனது இடத்தை வழங்கி உள்ளதாகவும் எனவே பழவேரி கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

8. **திரு.இராஜசேகர், பழவேரி கிராமம்**

இவர் கூறுகையில் குவாரி வருவதை வரவேற்பதாகவும் குவாரி உரிமையாளர்கள் கிராம மக்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் எனவும் மற்றும் மருத்துவ பரிசோதனை போன்றவற்றை ஏற்படுத்திதர வேண்டும் எனவும், வாகனங்களில் இருந்து தூசு பறக்காமல் சாலையில் தண்ணீர் ஊற்றி மக்களுக்கு இடையூறு இல்லாமல் இருந்தால் குவாரி வருவதை வரவேற்பதாக கூறினார்.

9. **திரு.ஹரிதாஸ், பழவேரி கிராமம்**

இவர் கூறுகையில் கல்குவாரிகளால் பல்வேறு பாதிப்புகள் இருப்பதாகவும், எந்த குவாரியும் சாலையில் தண்ணீர் ஊற்றுவதில்லை எனவே காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்குவாரியையும் மூட வேண்டும் என கூறினார் மேலும் கல்குவாரிகளின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

10. **திரு.தமிழரசு, பழவேரி கிராமம்**

இவர் கூறுகையில் இதுவரைக்கும் இருக்கின்ற கல்குவாரிகளை மூட வேண்டும் தவிர புதியதாக கல்குவாரி வேண்டாம் எனக் கூறினார். வாகனங்களில் அதிகப்படியான கற்களை ஏற்றுவதால் ஏற்படும் தூசினால் மக்கள் பாதிக்கப்படுவதாக கூறினார். கல்குவாரியினால் நிலத்தடி நீர் மற்றும் விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளது எனவே பழவேரி கிராமத்தில் கிரஷர்கள் தேவையில்லை எனவும் இருக்கின்ற கிரஷர்களின் எண்ணிக்கை குறைக்க வேண்டும் எனக் கூறினார்.

11. **திரு.தசரதன், பழவேரி கிராமம்**

இவர் கூறுகையில் கல்குவாரியில் இருந்து கல் ஏற்றி செல்லும் லாரிகள் தார்ப்பாய் கொண்டு மூடி எடுத்துச் செல்ல வேண்டும் எனவும், சாலையை சீரமைத்து தர வேண்டும் எனவும் மக்களுக்கு இடையூறு இல்லாமல் இயக்க வேண்டும் என கூறினார்.

12. **திரு.மேகவண்ணன், பழவேரி கிராமம்**

இவர் கூறுகையில் லாரிகளில் அதிகப்படியான கற்கள் ஏற்றி செல்வதினால் தான் அதிக தூசி உருவாகின்றது எனவே அதை கட்டுப்படுத்த வேண்டும் எனக் கூறினார் வீட்டிற்கு தேவையான கட்டுமான பொருட்கள் எங்கு போய் வாங்கமுடியும் என்றும், எனவே கல்குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

பின்னர் சார் ஆட்சியர் காஞ்சிபுரம் கோட்டம், அவர்கள் பொதுமக்கள் யாரேனும் தங்களது கருத்தினை தெரிவிக்க விரும்பினால் பதிவு செய்ய

முன்வரலாம் என தெரிவித்ததின்பேரில், பொதுமக்கள் யாரும் கருத்தினை தெரிவிக்க முன்வராததால், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகளை சுருக்கமாக தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

இதனை தொடர்ந்து, இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை எடுத்துரைத்தார். மேலும், இந்நேர்வில் பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உத்திரமேரூர் வட்டாட்சியர் அலுவலகம், பழவேரி கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in -இல் வெளியிடப்படும் எனவும், நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் –தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தி. பு. ஜெகதீசன் (கையொப்பம்)

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருப்பெரும்புதூர்.

சார் ஆட்சியர்,
காஞ்சிபுரம் கோட்டம்.

<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 10.01.2025).

2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு (11 பக்கங்கள் 100 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட விரலி (Pendrive).
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் மனுக்கள் ஏதும் பெறப்பட்டவில்லை.